மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25 (1)—ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—16 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

29. (i) 15—9—2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்—2, பகுதி—2—ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/783(c—2)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 13—10—2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 125—ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) 2017 ஆம் ஆண்டு மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 12/2017) பிரிவு 54 அல்லது பிரிவு 55—ன்கீழ் வாரியத்தின் ஆணையரால் அமர்த்தப்பட்டு அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்களை, 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) பிரிவு 54 அல்லது 55—ன்கீழ், திருப்புத்தொகை ஒப்பளிப்பு

செய்யும் நோக்கத்திற்காக செயல்பட அதிகாரிகளாகக் குறிப்பிட்டது குறித்து 13–10–2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 126–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iii) மொத்த விற்பனைத் தொகையானது முந்தைய நிதியாண்டில் அல்லது பதிவுபெற்ற ஆண்டில் ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சத்திற்குக்கீழ் இருக்கும் பட்சத்தில் மற்றும் 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) பிரிவு 10–ன்கீழ் இணக்க வரி விதிப்பிற்கு விருப்பம் தெரிவிக்காத பதிவு பெற்ற நபருக்கு சரக்குகளின் வெளிப்புற வழங்கலுக்கான மாநில வரியினை வழங்கல் நேரத்தில் செலுத்தும் வகையான நபர்களாக அறிவித்தது குறித்து 13–10–2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 127–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (iv) 29–6–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/CTR/532(d–1)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 13–10–2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 128–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (v) 29–6–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–14)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 13–10–2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 129–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (vi) 29–6–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பகுதி–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–15)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 13–10–2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 130–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (vii) 29–6–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு 2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–16)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 13–10–2017 ஆம் நாளிட்ட வணிக வரி

மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 131–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (viii) 29–6–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–4)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 13–10–2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 132–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ix) 29–6–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–5)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து 13–10–2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 133–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (x) 29–6–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–17)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 13–10–2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 134–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xi) சரக்குகளின் உள் மாநில வழங்கலுக்கான மாநில வரியினை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள வரி வீதத்தை மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு அறிவித்தது குறித்து 13–10–2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 135–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xii) 29–6–2017 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/532(d–11)/2017 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 13–10–2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 136–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xiii) 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (சிரமங்களை நீக்குவதற்காக) ஆணை வெளியிட்டது குறித்து 13–10–2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 137–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xiv) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சரக்குகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு

மாநிலத்திற்குள் வழங்கப்படும் சரக்குகள்மீது 2.5 சதவீதம் மாநில வரி வீதத்தை அறிவித்தது குறித்து 17–10–2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 140–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xv) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சரக்குகளின் வழங்கல்களை ஏற்றுமதியாகக் கருதப்படுபவை என அறிவித்தது குறித்து 17–10–2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 142–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (xvi) அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு திருப்புத் தொகை கோரிக்கைக்காக ஏற்றுமதியாக கருதப்படும் வழங்கல்களின் வழங்குநரால் சமர்ப்பிக்கத் தேவைப்படும் ஆதாரங்களை அறிவித்தது குறித்து 17–10–2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 143–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (xvii) உரிய தேதிக்குள் 2017 ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு படிவம் GSTR–3B நமூனாவை அளிக்கத் தவறிய பதிவு பெற்ற நபர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய தாமதக் கட்டணத்தை தள்ளுபடி செய்தது குறித்து 24–10–2017 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 147–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

30. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (எம்)த் துறையின் 8–3–2018 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 28–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

31. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (எம்)த் துறையின் 18–4–2018 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 47–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 320(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

32. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

33. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

34. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் ஐம்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

34. 2018–2019 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

35. “கஜா புயலால் மின் கட்டமைப்புக்கு ஏற்பட்ட பாதிப்பு மற்றும் தமிழ்நாடு மின் வாரியத்தின் ஒருங்கிணைந்த மீட்புப் பணிகள்” என்கிற சிறுநூல். (தமிழ்)

ALONE TRIUMPH

———